திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அயலக அணித் தலைவர் முனைவர் ஜி.மனோகரன் - சீத்தாலட்சுமி இல்ல மணவிழா வரவேற்பு அன்மையில் நடைபெற்றது. இதையொட்டி அமைச்சர் ஆர்.காந்தி மணமக்களை அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்தினார். இந்நிகழ்வில் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், கன்னிகை ஸ்டாலின், பி.வெங்கடாசலபதி, எம்.எல்.ரவி, ப.செ.குணசேகரன், கே.எஸ்.சதீஷ்குமார், சுரேஷ், சேகர் (எ) சீனு, கொள்கை டி.பாபு, பாசம் அன்பு, பழனி, சேட்டு, அன்பு , மாரிமுத்து உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

சென்னை – தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக துறையில் 6 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனங்களை வழங்கினார். உடன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன். குமார், கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி சி.ஹேமலதா, தொழிலாளர் துணை ஆணையர் (பணிக் குழு மற்றும் பொது) தே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'மிக்ஜாம்' புயலால் பாதிக்கப்பட்ட - சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட

5 தொகுதி மக்களுக்கு - ரூ. 6 ஆயிரம் நிவாரணத் தொகை!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச.18-

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (17.12.2023) சென்னை, துறைமுகம், திரு.வி.க. நகர், கொளத்தூர், வில்லிவாக்கம் மற்றும் அம்பத்தூர் ஆகிய தொகுதிகளின் நியாய விலைக் கடைகளில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/ நிவாரணத் தொகை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையின் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக ரூபாய் 6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை பெறுவதற்கான டோக்கன்கள் வழங்கப்பட்டன.

முதலமைச்சர் அவர்கள் நேற்று (17.12.2023) சென்னை வேளச்சேரியில் வெள்ள நிவாரணத் தொகையாக ரூ.6000/ ஐ பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சத்யா நகர், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு, கேசவபிள்ளை பூங்கா, ஜமாலியா, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட அகரம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம், சிட்கோ நகர், அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாடி ஆகிய பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைகளில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000/ நிவாரணம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், திரு.வி.க. நகர் நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா.கணேசன், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் கூ.பீ.ஜெயின், பி.கே.மூர்த்தி, ஸ்ரீராமுலு, திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் சரவணன், திருமதி.சுமதி, நாகராஜன் திருமதி.நாகவல்லி, டி.எஸ்.பி.ராஜகோபால் மற்றும் திருமதி.சாவித்திரி வீரராகவன், சிட்கோ சேகர், ராஜன், சாமிக்கண்ணு, தயாளன், பாலு, சந்துரு, ஐ.சி.எஃப்.முரளி, ராஜசேகர், பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. முன்னிலையில் திரு.வி.க. நகர் 76 வது வட்டத்தில்

மழை நிவாரணப் பொருட்கள்: அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார்!

மேயர் பிரியா - எம்.சாமிக்கண்ணு - எஸ்.சசிகுமார் - எஸ். வெங்கடேசன் பங்கேற்பு!

சென்னை,டிச.18-

கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையின் படி

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76 வது வார்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பெட்ஷீட் ,பால், ரொட்டி, பிஸ்கட், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரன பொருட்களை கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, எம்.சாமிகண்ணு முன்னிலையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

உடன் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், பகுதி மாமன்ற உறுப்பினர் தமிழ்செல்வி சசிகுமார், வட்ட செயலாளர்கள் எஸ்.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கி.நாகலிங்கம் , நெல்லை முத்தையா, எச்.திவாகர் ஆர்.ஜான், எம்.பேட்ரிக், பி.வினோத்,எ.இருதயராஜ், சத்தியா, எம்.சக்திவேல், வழக்கறிஞர் சதீஷ், இரா.செல்வம், டேபிகனா சுரேஷ், தோசை சுரேஷ் எஸ்.மோகன்ராஜ், ஓட்டேரி ஜெய்பால்,எம்.ராஜேஷ், எம்.அசோக், சி.வெங்கடேசன், கே.இன்பா, எம்.மனீஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சி ஊழியர்களுக்கு நல உதவிகள் !

பா.பால உமாபதி, டி.இ.பரணிகுமார் முன்னிலை !

சென்னை டிச:18

மழை வெள்ளத்தால் மக்கள் சிரமப்பட்ட நேரத்தில் மக்கள் பணிகளை சிறப்பாக செய்து மழைநீர் தேங்காமல் சுகாதாரமாக இருக்க பணிபுரிந்த தூய்மைப் பணியாளர்களுக்கு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்கள் மற்றும் மாநகராட்சி ஊழியர்களை

பாராட்டி ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு கழகத் துண்டு அணிவித்து 50 பேருக்கு இனிப்பு மற்றும் பிஸ்கட்டுகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி,13 வது வட்ட செயல்வீரர் டி.இ.பரணிக்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் உத்தமன், ஒய்.ஆர்.ரவி,ந.அனில் குமார், சீனிவாசன், உட்பட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

பெருங்குடி மண்டலத்தில் - ரூ. 75 இலட்சம் மதிப்பில்

பேட்டரியால் இயங்கும் - குப்பை சேகரிக்கும் 30 வாகனங்கள்!

துணை மேயர் மு.மகேஷ்குமார் இயக்கி வைத்தார்!

சென்னை, டிச.18-

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், புழுதிவாக்கம் சாலையில் உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பில் 30 எண்ணிக்கையிலான பேட்டரியால் இயங்கக்கூடிய குப்பை சேகரிக்கும் வாகனங்களை துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று முன்தினம் (16.12.2023) பயன்பாட்டிற்குக் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மிக்ஜாம் புயலின் காரணமாக சேதமடைந்த பேட்டரியால் இயங்கும் குப்பை சேகரிக்கும் வாகனங்களுக்கு மாற்றாக, உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் சார்பில் தலா ரூ.2.50 இலட்சம் வீதம் ரூ.75 இலட்சம் மதிப்பில் 30 எண்ணிக்கையில் பேட்டரியால் இயங்கக்கூடிய குப்பை சேகரிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, இன்று பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் குப்பை சேரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையின் காரணமாக 06.12.2023 முதல் 15.12.2023 வரை 77,528 மெட்ரிக் டன் குப்பைக் கழிவுகள் மற்றும் 8,943 மெட்ரிக் டன் தோட்டக்கழிவுகள் என மொத்தம் 86,471 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.வி.ரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன், உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மெஹ்மூத் செயட் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் புதுவாயல் பெருவாயல் ஊராட்சிகளில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 1100 குடும்பங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ வழங்கினார். உடன் மு.மணிபாலன், CAPLIN POINT கோபி, தொழிலதிபர் ராமராவ், ஊ.ம.த.சதீஷ்குமார், மாணவர் அணி டி.ஜெ.ஜி.தமிழரசன், மீனவர் அணி கே.ஆறுமுகம், சேகர், ஆனந்தன், மோகன், கபில், கார்த்திக், இலக்கிய அணி இ.எம். ராஜேஷ், சிவகுமார், ரமேஷ், பழனி, கோவிந்தன், ஷியாம், பால சண்முக, கொள்ளானூர் கொ.வி.அறிவழகன், கே.கதிரவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

ரூ.52.99 இலட்சத்தில் முடிவுற்ற பணிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை டிச.18

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல்வேறு முடிவுற்றப் பணிகளை,

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (15.12.2023) அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்டுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்களின் வசதிக்காக சாலைவசதி, மின்வசதி, குடிநீர்வசதி உள்ளிட்டவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல்வேறு முடிவுற்றப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

திருமயம் ஊராட்சி ஒன்றியம், மேலப்பனையூர் ஊராட்சி, பொன்னனூரில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.7.17 இலட்சம் மதிப்பீட்டிலும், கண்ணனூர் ஊராட்சியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.6.75 இலட்சம் மதிப்பீட்டிலும், மேலத்துருவாசபுரம் அம்பலக்காரர் வீதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.4.86 லட்சம் மதிப்பீட்டில் 80 மீட்டர் நீளமுடைய சிமெண்ட் சாலை பணியினையும், கீழத்துவாச புலத்தில் ஆதிதிராவிடர் காலனியில் ரூ.2.43 லட்சம் மதிப்பீட்டில் 40 மீட்டர் நீளமுடைய சிமெண்ட் சாலை பணியினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கற்பக விநாயகா அறக்கட்டளையின் நிதியுதவி யுடன் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலைப் பணியினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.90 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும் திறந்து வைத்து, வி.லெட்சுமிபுரம் ஊராட்சி, சிவன் கோவில் வளாகத்தில் 250 மரக்கன்றுகள் நடும் பணியினையும் துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, மேமணப்பட்டியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிலும், நெறிஞ்சிக்குடி ஊராட்சி, பாலப்பட்டியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.6.48 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய மின்மாற்றிகள் திறந்து வைக்கப்பட்டது.

திருமயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் முன்னேறிய பகுதிகளாக மாற்றம் செய்திடும் வகையில் இப்பகுதிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டப் பணிகளை முழுமையாக பயன்படுத்திக்கொண்டு தங்களது வாழ்வாதாரத் தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவிதப்பிரியா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு(எ)சிதம்பரம், மின்சார வாரிய செயற்பொறியாளர் எம்.ஆனந்தாய், உதவி செயற்பொறியாளர் கா.ராம னாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், நளினி, மின் பொறியாளர் சாத்தையா, வட்டாட்சியர் புவியரசன், ஊராட்சித் தலைவர்கள் ராமநாதன் (எ) ராமசாமி (வி.லெட்சுமிபுரம்), சண்முகசுந்தரம் (கண்ணனூர்), கணேசன், மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, பொன்.பாரி, சுப.துரைராஜா, அருண்குமார், ராஜமாணிக்கம், முல்லை ரமேஷ், அண்ணாத்துரை, சிவக்குமார், அய்யாச்சாமி, காசி.பொற்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் (BLA2) பூத் இளைஞரணி உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி, தொகுதி பார்வையாளர் உமாகாந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராமகாமத்துபுரம் பகுதியில் "மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பணிகள் நிலைக் குழுத் தலைவருமான நே.சிற்றரசு ஆகியோர் வழங்கினர். உடன் பகுதி செயலாளர் மா.ப.அன்புதுரை மற்றும் பலர் உள்ளனர்

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், புழுதிவாக்கம் சாலையில் உர்பேசர் ஸ்மித் நிறுவனத்தின் சார்பில் 30 எண்ணிக்கையிலான பேட்டரியால் இயங்கக்கூடிய குப்பை சேகரிக்கும் வாகனங்களை துணை மேயர் மு.மகேஷ் குமார் நேற்று முன்தினம் (16.12.2023) கொடியசைத்து பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மண்டல குழு தலைவர் ரவிச்சந்திரன், தலைமை பொறியாளர் திடக்கழிவு மேலாண்மை மகேசன், உர்பேசர் ஸ்மித் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மெஹ்மூத் செயட் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.